**மொறட்டுவ மாநகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 21 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 24 ஆந் திகதியன்று மாநகர ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர மொறட்டுவ மாநகர சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

(அ) ஆறு சொத்தக்களது கூட்டுத் தொகைப் பெறுமதியாகிய ரூபா 20,375,561 மற்றும் 3 பொறுப்புகளது கூட்டுத் தொகைப் பெறுமதியாகிய ரூபா 670,297 என்பன கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல்களை நடப்பாண்டில் மேற்கொண்டதால் மீளாய்வாண்டினது மிகை ரூபா 222,980 அதிகரித்தும் திரண்ட நிதியம் ரூபா 11,513,563 அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(இ) வீதி விளக்குப் பராமரிப்பிற்கு மின்சார (தனியார்) கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூபா 10,140,025 பொதுத் திறைசேரியால் அக்கம்பனிக்கு வழங்கப்படாததால் அதனை மீளளிக்க முடியாது உள்ளதாக அக்கம்பனி 2013 டிசெம்பர் 12 ஆந் திகதி அறிவித்திருந்தும் அத் தொகை பெற வேண்டியனவாகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 எதிர்பாராப் பொறுப்புகள்

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு மொறட்டுவ மாநகர சபைக்கு எதிராக 05 நீதிமன்றங்களில் தீர்ப்பு வழங்கப்படாதிருந்த 07 வழக்குகள் சம்பந்தமாகவும் மாநகர சபை முறையான நிதி நிர்வாகத்தை மேற்கொள்ளாமையாலும் பிரதான நடைமுறைக் கணக்கினூடாகப் பெறவேண்டியேற்பட்ட மேலதிகப் பற்று வசதிகளுக்கு சபையின் ரூபா 25,105,037 பெறுமதியான நிலையான வைப்பு பிணையாக வைக்கப்பட்டதை நிதிக்கூற்றில் வெளிப்படுத்தவில்லை.

### 1.3.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 279,105,733 கூட்டுத் தொகையுடைய 12 கணக்கீட்டு விடயங்களது மீதிகள் அவற்றுடனொத்த உப பதிவேட்டு மீதிகளுடன் கணக்கிணக்கஞ் செய்யப்படுகையில் நிதிக்கூற்றுக்களில் ரூபா 29,762,284 அதிகரித்தும் ரூபா 13,224,968 குறைந்தும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இடமாற்றம் பெற்ற 10 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 645,100 மற்றும் சேவை விலகிய மற்றும் ஓய்வு பெற்ற 131 ஊழியர்கள் ஆகியோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,573,424 கடனில் 2015,2016 ஆம் ஆண்டுகளின்போது எதுவித அறவீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொடுப்பனவு மறுக்கப்பட்ட 3 முதல் 17 ஆண்டு காலத்திற்குரிய காசோலைகளது பெறுமதியாகிய ரூபா 506,828 மீளாய்வாண்டிலேனும் அறவிடப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாதிருந்த ரூபா 489,218 முற்பண மீதியில் ரூபா 188,402 ஒன்று முதல் 15 ஆண்டுகள் பழமை வாய்ந்த மீதிகளாகும்.

(ஈ) ஆறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பெற வேண்டிய தொகையாக இருந்து வரும் ரூபா 15,569,883 கூட்டுத் தொகை மீதி தொடர்ந்தும் முன்கொண்டு வரப்பட்டவாறிருந்தது.

(உ) பெற வேண்டிய விடுதிக் கட்டணமாகக் கணக்கில் காட்டப்படட் ரூபா 526,500 பதினைந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்ததாகும்.

(ஊ) 2001 சனவரி 20 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் (மேல் மாகாணம்) எல்ஜி/3/2000 ஆம் இலக்கச் சுற்றறிக்கைப் பிரகாரம் வினோத வரியை 10 சதவீம் வரை குறைத்தல் மற்றும் 2005,2006 ஆம் ஆண்டுகளுக்கான மாநகர சபை இழப்பிற்குள்ளான ரூபா 3,228,197 வினோத வரி என்பன மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மீளளிப்புச் செய்யப்படவில்லை.

(எ) 2012 முதல் 2015 வரையான காலப் பகுதியின்போது கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு பாணந்துறை பிரதேச சபையிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,303,203 மீளாய்வாண்டின்போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 1999 முதல் 2012 வரையான காலப்பகுதியின்போது 21 இறைச்சிக் கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 642,055 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பத்துக் கணக்கீட்டு விடயங்களது ரூபா 448,685,185 கூட்டுத் தொகையுடைய மீதிகளை உறுதி செய்தற்குத் தேவையான எழுத்துமூலச் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் மீதிகள் சரியானவையா என்பதை உறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டம் | சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் குறித்த தினங்களில் சமர்ப்பிக்கப்படாதலால் தண்டப் பணமாக ரூபா 1,472,582 செலுத்துவதற்கான பொறுப்பு சபைக்கு ஏற்பட்டிருந்ததுடன், அத்தண்டப்பணத் தொகையில் 2016 முதல் 2017 ஏப்ரல் வரையான ரூபா 464,325 தண்டப் பணத்தைச் சபை செலுத்தியிருந்தது. |
| (ஆ) 1951 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகாரச் சட்டம்<br>25(1),99(1) ஆம் பிரிவுகள் | வருவாய் அனுமதிப் பத்திரங்களை 23 வாகனங்களும் வருவாய் அனுமதிப்பத்திரத்துடன் காப்புறுதிச் சான்றிழ்களை 08 வாகனங்களும் பெறாதிருந்தன. |
| (இ) மாநகரசபைகள் கட்டளைச் சட்டம் (252 ஆம் அத்தியாயம்) | |
| (i) 188 (1) ஆம் உப பிரிவு | (i) இப் பிரிவில் காணப்படும் செலவினம் நிதியேற்பாட்டின் மூலம் ஈடு செய்யப்பட முடியாத மாநகர சபையின் 27 அங்கத்தவர்களின் பொருட்டு திடீர் விபத்து மற்றும் சுகாதாரக் காப்புறுதி என்பவற்றிற்குச் சபையின் நிதியிலிருந்து 2015,2016 ஆம் ஆண்டுகளின்போது முறையே ரூபா 629,690 மற்றும் ரூபா 1,059,832 எனக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தனவற்றைக் குறிப்பனவாகும். |
| | (ii) மாதாந்தச் சபை கூட்டத்தில் பங்குபற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு ஆடைக் கொள்வனவுக்காக 2014,2015 ஆம் ஆண்டுகளின்போது சபையின் நிதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 415,480 செலவினமானது மீளாய்வாண்டு முடிவிலும் அறவிடப்படாதிருந்தது. |
| (ii) 266 (அ) பிரிவு | (iii) இரண்டு கடைகளிலிருந்து சபை பெற வேண்டிய ரூபா 266,400 நிலுவைத் தொகையைப் பதிவழிப்பதற்கு அமைச்சின் அங்கீகாரம் பெறப்படவில்லை. |
| (ஈ) தாபன விதிக் கோவை | |
| (i) அத்தியாயம் XIX<br>4.2.1 ஆம் பிரிவு | அரசாங்க மனைகளை பட்டியலிடப்பட்ட மனைகள் அல்லது பொது மனைகள் என வகைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |
| 4.3.4 ஆம் பிரிவு | ஒவ்வொரு தரத்திலும் அமைந்த மனைகளுக்கு வெவ்வேறு எதிர்பார்ப்புப் பதிவேடுகள் பேணப்படவில்லை. |

| | |
|---|---|
| 6.1 ஆம் பிரிவு | குறித்தவொரு பதவிக்கென ஒதுக்கப்பட்ட மனையை விட ஏனைய மனைகளது குத்தகைக் காலம் 05 ஆண்டுகளாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளபோதும், 61/2 முதல் 19 ஆண்டுகளாக மனைகளில் வசிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. |
| 6.1.4 ஆம் பிரிவு | அரசாங்க மனையில் குடியிருக்கும் உத்தியோகத்தர் வேலை இடமாற்றம் பெற்று அதனை விட்டு நீங்கும்போது முறைப்படி அவற்றை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(ii) அத்தியாயம் XXIV

| | |
|---|---|
| 1.6 ஆம் பிரிவு | வேலை இடமாற்றத்திற்குள்ளான 5 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 440,983 கடன் தொடர்பாகப் புதிய திணைக்களத்திற்கு அறிவித்திருக்கவில்லை. |
| 4.1 ஆம் பிரிவு | வழங்கப்பட்ட கடன் முற்றாக அறவிடப்படாது இருக்கையில் ரூபா 254,290 கடனாக வழங்கப்பட்டிருந்தது. |
| 4.6 ஆம் பிரிவு | வேலை இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து. அறவிட முடியாத கடன் தொடர்பாக தாமதமின்றி சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற வேண்டுமாயினும் அவ்வாறு செய்யப்படவில்லை. |

(உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்

| | | |
|---|---|---|
| (i) | நி.பி 128 | முறையான நிதி நிர்வாகம் இன்மையால் 2016ஆம் ஆண்டின்போது பெறப்பட்ட வங்கி மேலதிகப் பற்று தொடர்பாக மீளாய்வாண்டின்போது மேலதிகப் பற்று வட்டியாக ரூபா 1,369,169 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | நி.பி 156 | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான கொடுப்பனவுகள் குறித்தவாறு வழங்கப்படுவது புறக்கணிக்கப்பட்டமையால் 2015 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 76,454 தண்டப்பணம் அதற்குப் பெறுப்பானவர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (iii) | நி.பி 261(3) | நடைமுறைக்கணக்கில் பணமில்லாதபோதும் மீளாய்வாண்டின்போது காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (iv) | நி.பி 371(2) | 2016 ஆம் ஆண்டின் போது வழங்கிய ரூபா 53,000 முற்பணம் தீர்த்து வைக்கப்படுவதில் 50 முதல் 184 நாட்கள் வரையிலான தாமதம் நிலவியது. |
| (v) | நி.பி 371(5) | முற்பணத்தைப் பெற்ற ஆண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியன்றோ அல்லது அத்தினத்திற்கு முன்னரே அது தீர்த்து வைக்கப்பட வேண்டியதாகவிருந்தும் 2000 முதல் 2016 வரை வழங்கப்பட்ட ரூபா 489,218 முற்பணமானது மீளாய்வாண்டு முடிவளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. |
| (vi) | நி.பி396 | வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதுள்ள 06 மாதங்களைக் கடந்த ரூபா 39,155 கூட்டுத் தொகையுடைய 69 காசோலைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (vii) | நி.பி 570 மற்றும் 571 | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு திருப்பிச் செலுத்தவேண்டிய வைப்புகளில் ரூபா 7,662,878 காலங் கடந்த 2007 முதல் 2014 வரையிலான வைப்புகள் ஆகும். எனினும், இவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (viii) | நி.பி 756 | நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட ரூபா 269,478,251 பெறுமதியான நிலையான வைப்புகள் மற்றும் ரூபா 21,375,091 களஞ்சியக் கையிருப்பு சம்பந்தமாக ஆண்டின் இறுதியில் உள்ளவாறு கையிருப்புச் சரி, பிழை பார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ix) | நி.பி 1645 மற்றும் நி.பி 1646 | நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்தப் பொழிப்பும் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், சபையில் எந்த வாகனத்திற்கும் மாதாந்தப் பொழிப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஊ) சுற்றறிக்கைகள்

| | | |
|---|---|---|
| (i) | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | சபைக்குரிய வாகனங்களது எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்படவில்லை. |
| (ii) | 2012 யூலை 11 ஆந் திகதிய உள்ளுராட்சி ஆணையாளரது (மேல மாகாணம்) WP/LGD/01/2012 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | திட்டக் குழுவினது பணிகள் சம்பந்தமாக மாதாந்த செயல் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு அவ்வறிக்கை தொடர்புடைய மாதத்தின் மாதாந்தச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (iii) | உள்ளுராட்சி ஆணையாளரின் 1980 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | குறைந்தது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் மதிப்பிடப்பட்ட குத்தகை வாடகையை மீளாய்வு செய்து உடன்படிக்கை நாளதுவரையாக்கப்பட வேண்டுமாயினும் 06 முதல் 29 ஆண்டுகளாக 142 கடைகளது உடன்படிக்கைகள் நாளதுவரையாக்கப்படாதிருந்தன. |

### 1.3.7 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இறுதிக் கணக்குகளில் அநேக ஆண்டுகளாக மாற்றமின்றித் தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டவாறிருந்த நிறுத்தி வைத்த வைப்புகள் மற்றும் ஊழியர் கடன் வைப்புகள் என்பனவற்றின் மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 290,818 ஆகும். முறையான அங்கீகாரமோ அல்லது இணங்காணலின் மூலமோ அல்லாது மீளாய்வாண்டில் இவை பதிவழிக்கப்பட்டிருந்தன.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாநகரசபையின் மீண்டுவருருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 65,914,271 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருவாயிலும் கூடிய செலவினம் ரூபா 17,040,824 என அவதானிக்கப்பட்டது.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 வருவாய் சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்கும் மாநகர ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பற்றின் தகவல்கள் பின்வருமாறு

| | 2016 | | | | 2015 | |
|---|---|---|---|---|---|---|
| வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறான வருவாய் | ஆண்டிற்கான நிலுவை | டிசெம்பர் 31இல் உள்ளவாறான மொத்த நிலுவை | உள்ளவாறு அறவிடப்பட வேண்டியது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| தீர்வையும் வரியும் | 110,901 | 106,868 | 4,303 | 145,365 | 58,701 | 149,204 |
| குத்தகை வாடகை | 11,250 | 11,865 | - | - | 11,159 | 3,194 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 20,504 | 20,686 | - | 2,933 | 11,083 | 54,045 |
| ஏனைய வருவாய் | 170,740 | 165,127 | 5,613 | 102,301 | 152,924 | 10,140 |
| | 313,395 | 304,547 | 9,646 | 250,599 | 233,867 | 216,583 |

#### 2.3.2 தீர்வையும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் பிரகாரம் தீர்வை வரி அறவிடப்படுதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டினது இறுதியில் நிலுவையாக இருந்த தீர்வை வரி மீதி ரூபா 145,975,458 ஆகும். இந்த மீதியில் உள்ளடங்கிய ரூபா 50,000க்கு மேற்பட்ட 131 கூறுகளது மீதி ரூபா 61,650,608 ஆகும்.

(ஆ) 2015, 2016 ஆம் ஆண்டுகளின்போது தீர்வை வரியான ரூபா 2,443,648 பதிவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதற்கான அங்கீகாரம் பெறப்படாததுடன், 2008 முதல் 2016 வரை மாநகரசபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடத்தில் சொத்துக்களது பெறுமதி பெருமளவு அதிகரித்திருந்தபோதும், 2008 ஆம் ஆண்டின் பின்னர் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.3.3 கடை வாடகை

வாடகை உடன்படிக்கைகளின்றி 46 விற்பனைக் கூடங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறான 18 விற்பனைக் கூடங்களின் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிலுவை ரூபா 442,920 ஆகும். மாதாந்த வாடகை எதனையும் செலுத்தாத 2 கடைகள் சம்பந்தமாக உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் சபைக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூபா 489,600 ஆகும்.

2.3.4 கழிவுப் பொருட்களை அகற்றுதல்

2012 முதல் 2016 வரை இலகுவான கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு சபை பெற வேண்டியிருந்த தொகை ரூபா 7,826,652 ஆகும். இந்நிலுவையில் ரூபா 50,000க்கு மேற்பட்ட 30 இடங்களுக்குரிய கூட்டுப் பெறுமதி ரூபா 3,441,300 ஆகும்.

2.3.5 நீதிமன்றத் தண்டப் பணம்

முன்னைய ஆண்டின் நீதிமன்றத் தண்டப் பணமாகிய ரூபா 20,524,903 நலிவடைந்து 97 சதவீதக் குறைவுடன் ரூபா 636,839 ஆகியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிராததும் 2013 ஆம் ஆண்டிற்கான வியாபார வரியைச் செலுத்தியிராததுமான வர்த்தகர்களுக்கு எதிராக மாநகரசபை தொடுத்திருந்த வழக்குகளை வாபஸ் பெற்றதன் மூலம் வரி செலுத்தியிராத 52 வர்த்தக மற்றும் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிராத 117 வர்த்தக நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து பெற வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணத்தையும் நீதிமன்றத் தண்டப் பணத்தையும் மாநகர சபை இழந்திருந்தது.

(ஆ) 2012 முதல் 2015 வரை 208 ஊழியர்களது பங்களிப்புத் தொகையாக ரூபா 13,825,119 அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தபோதும், அவ்வூழியர்களில் 64 பேர் நிதியத்தில் பதிவு செய்யப்படுவதற்குத் தேவையான விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பித்து அவர்களுக்குரிய இலக்கங்களைப் பெறுவதற்கு 2016 இறுதியளவிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) லுனாவ சுற்றுலா விடுதி அமைந்துள்ள 0.7063 ஹெக்டயாரில் அமைந்துள்ள விசாலமான காணியை அடுக்கு மாடி வீட்டுச் செயற்திட்டத்துக்கென வீடமைப்பு அமைச்சு சுவீகரித்திருந்தது. அதற்குரிய உடன்படிக்கைகளோ அல்லது இழப்பீட்டு விபரமோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்திக்கு முரணாக சபைக்குச் சொந்தமான 226/2026 ஆம் இலக்க கம்பெக்டர் வாகனமொன்று 2010 ஆம் ஆண்டின்போது பொரலெஸ்கமுவ நகர சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

## 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள 63,625 சொத்துக்களது தீர்வை வரியின் மூலமான வருவாயை முகாமைத்துவமிடுவதற்கு 2007 ஆம் ஆண்டின்போது ரூபா 850,556 செலவில் கணனி மென் அணி முறைமை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. சேவை உடன்படிக்கைக்கென வருடாந்தம் ரூபா 111,945 வழங்கப்பட்டிருந்தது. இக்கணனி மென் அணியில் நிலவிய பல்வேறு குறைபாடுகளைச் சீராக்குவதற்கான நடவடிக்கைகளைச் சபை மேற்கொள்ளவில்லை.

(ஆ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் 2009 முதல் 2011 வரையான காலப் பகுதிக்கென 2014,2105 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட வரிக் கட்டளைகளின் பிரகாரம் ரூபா 10,896,288 தண்டப் பணத்துடனான ரூபா 31,137,637 பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பன 2017 மே 29 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

(இ) கொடுப்பனவு மறுக்கப்பட்ட ரூபா 1,098,723 பெறுமதியான காசோலைகளில் 90 காசோலைகள் 03 முதல் 17 ஆண்டு பழமை வாய்ந்தவையாகும். அவற்றின் பெறுமதி ரூபா 506,828 ஆகும். அதனை அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் எரிபொருளுக்கான படி, வங்கி வட்டி, கழிவுப் பொருள் அகற்றுலுக்கான கட்டணம் மற்றும் ஏனைய செலவினம் போன்ற செலவின விடயங்களது முன்னைய ஆண்டின் செலவினமாகிய ரூபா 22,879,333 மீளாய்வாண்டில் ரூபா 42,219,113 வரை 85 சதவீத அசாதாரண அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

(உ) மத்திய வர்த்தகச் சந்தையின் கட்டிடத்தில் உள்ள இரண்டாவது மாடி 2010 ஒக்டோபர் 31 ஆந் திகதியின் பின்னர் வாடகைக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளைச் சபை மேற்கொண்டிராததுடன், ஏறக்குறைய 11 ஆண்டுகளாக சபைக்குரிய எந்தக் கடைக் கட்டிடமும் வெள்ளை பூசப்பட்டோ அல்லது பழுதுபார்க்கப்பட்டோ இருக்காமையால் அவை மிகப் பாதிப்புக்குள்ளாகியிருந்தன.

## 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான மைக்ரோ வகை வாகனத்திற்கு ஜப்பானிய இயந்திரத்தைப் பொருத்துவதற்காக பழுதுப்பார்ப்பவர்களுடன் உடன்படிக்கையில் ஈடுபடாது 2014 ஆம் ஆண்டில் ரூபா 712,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2017 ஏப்ரல் 17 வரை பழுதுபார்த்தல் முடிவடையாது வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், கழற்றி அகற்றப்பட்ட இயந்திரம் மீளப் பொறுப்பேற்கப்பட்டிருக்கவுமில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான அம்புலன்சு வண்டி ஒன்று முறையான விதிமுறையோ அல்லது மோட்டார் போக்குவரத்து ஆணையாளரது அங்கீகாரமோ இல்லாது பயணிகளுக்கான வாகனமாக மாற்றஞ் செய்யப்படுவதற்கு 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 1,998,500 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 ஏப்ரல் 17 ஆந் திகதியளவிலும் பழுதுபார்த்தல் நிறைவேறி அது பயன்படுத்தப்படாதிருந்ததுடன், பழுதுபார்த்தலின்போது அகற்றப்பட்ட துணைப் பாகங்கள் எதுவும் திருப்பி ஒப்படைக்கப்படாதுமிருந்தன.

3.4 **டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்**

டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 25,750,938 செலவிடப்பட்டிருந்தபோதும், சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் முன்னைய ஆண்டில் 812 ஆகவிருந்த டெங்கு நோயாளிகள் மீளாய்வாண்டில் 42 சதவீத அதிகரிப்புடன் 1150 ஆகியிருந்தனர். முன்னைய ஆண்டில் டெங்கு நோயால் மரணமெதுவும் அறிவிக்கப்பட்டிராதபோதும், மீளாய்வாண்டில் ஒரு மரணம் அறிவிக்கப்பட்டிருந்தது. தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட சிவப்பு அறிவித்தல்களின் எண்ணிக்கை போன்றன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் மீளாய்வாண்டில் அதிகரித்திருந்தபோதும், நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களுடன் கூடிய வீடுகளின் எண்ணிக்கை மற்றும் நுளம்புப் புழுக்களுடன் கூடிய வீடுகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தன. மீளாய்வாண்டில் அமுலாக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் டெங்கு நோய் பெருகுவதைத் தடுப்பதற்கும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குமான நடவடிக்கைகள் தோல்வியடைந்திருந்தன.

3.5 **செயற்திட்ட அமுலாக்கல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பொது நிதியச் செயற்திட்டத்தின் பொருட்டு வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டில் ஒதுக்கப்பட்டிருந்த தொகை ரூபா 145,050,000 ஆகும். இதில் 80 சதவீதமான ரூபா 115,786,601 தொடர்பான மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதியளவிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியளவிலும் ரூபா 12,376,407 மதிப்பீட்டிலான 19 நிர்மாண வேலைச் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கைகள் கைச்சாத்தாகவில்லை.

(இ) மீளாய்வாண்டின்போது வேலைகளை நிறைவேற்றுவதற்கு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட ரூபா 14,522,412 பெறுமதியான 24 நிர்மாண வேலைச் செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் ஆரம்பிக்கப்படாதிருந்தன.

3.6 **நூலகச் சேவை**

சபைக்குரிய 09 நூலகங்களில் ஒன்றினது கட்டிடம் பழுதடைந்தமையால் 2015 முதல் மூடப்பட்டவாறிருந்தது. மீளாய்வாண்டினது பொருள் மெய்மையாய்வின்போது புலனாகிய 894 புத்தகக் குறைவுகளும் 216 பழுதடைந்த புத்தகங்களும் பெறுமதியிடப்பட்டு அவற்றைக் கணக்கிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், மாநகர அங்கத்தவர்களும் உத்தியோகத்தர்களும் எடுத்துச் சென்ற புத்தகங்களை நூலகம் திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.7 **இணங்காணப்பட்ட இழப்புகள்**

சபைக்குச் சொந்தமான கம்பெக்டர் வாகனத்தைப் பழுதுப்பார்ப்பதற்குரிய உடன்படிக்கைகளின் பிரகாரம் 85 நாட்களுக்குத் தாமதக் கட்டணமாக ரூபா 255,000 பழுதுபார்ப்பவரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.8 வாகனப் பயன்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) 1985 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளின்போது மாநகர சபை பெற்றிருந்த ரூபா 2,600.000 பெறுமதியான 02 தீயணைப்பு இயந்திரங்கள் மீளாய்வாண்டு முடிவளவிலும் பதிவு செய்யப்படாதிருந்தன.

(ஆ) வாகனக் குழாமில் உள்ள ரூபா 25,078,000 பெறுமதியான 11 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 03 வாகனங்கள் என்பன நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை.

(இ) வெளி நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்ட சபைக்குரிய ரூபா 34,449,179 பெறுமதியான 06 வாகனங்களைச் சபை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) சபைக்குரிய கம்பெக்டர் வாகனமொன்று டிப்பர் வாகனமாக மாற்றஞ்செய்யப்பட்டிருந்தது. இதற்கான முன்மொழிதல் சபைக் கூட்டத்தின் போது நிராகரிக்கப்பட்டிருந்தது. சபை கலைக்கப்பட்டதன் பின்னர் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்துடன் குறித்த கூறு விலையைச் சமர்ப்பித்திருந்த 02 நிறுவனங்களது கூறு விலைகளை நிராகரித்து, முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு 03 மாதங்களுக்கு முன்னரே சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறு விலைகளின் அடிப்படையில் சபைக்கு ஏற்படும் சாதகமற்ற நிலைமையையும் கருத்திற் கொள்ளாது மொரட்டுவை நகரிலிருந்து 120 கீ.மீ தூரத்தில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 600,000 க்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டு கூறு விலைகளைக் கோராது இந்நிறுவனத்திற்கு ரூபா 165,000 க்கான மேலதிக பழுதுபார்த்தல் வேலைகளும் வழங்கப்பட்டிருந்தன. கம்பெக்டர் வாகனமொன்று டிப்பர் வாகனமாக மாற்றஞ் செய்யப்படுவது தொடர்பாக மீளாய்வாண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 120,000 மீண்டுவரும் செலவினமாக கணக்கிலிடப்பட்டிருந்தது.

(உ) பதினெழு மோட்டார் வாகனங்களது சம்பவப் பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**3.9 பதவியணி நிர்வாகம்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மாநகர சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் வருமாறு.

| **தரம்** | | | **2016 டிசெம்பா 31 இல் உள்ளவாறு** | |
|---|---|---|---|---|
| | **அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை** | **உள்ளவாறான எண்ணிக்கை** | **வெற்றிட எண்ணிக்கை** | **மேலதிக எண்ணிக்கை** |
| நிறைவேற்று தரம் | 21 | 31 | - | 10 |
| மூன்றாம் நிலை | 06 | 04 | 02 | - |
| இரண்டாம் நிலை | 233 | 203 | 30 | - |
| ஆரம்ப நிலை | 733 | 680 | 53 | - |
| | 993 | 918 | 85 | 10 |

(அ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிரந்தரப் பதவிகளில் 94 வெற்றிடங்கள் நிலவின. வெற்றிடங்களுக்கான கடமைகள் சமயாசமய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட சந்தர்ப்பங்களின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தன. குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சமயாசமய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்த நிலையிலும் மொத்த வெற்றிடங்கள் 85 ஆகியிருந்தன.

(இ) அவசர சந்தர்ப்பங்களின்போது மிகவும் பாதகமான தாக்கத்தை விளைவிக்கக் கூடிய நிலையில் தீயணைப்புப் பிரிவின் பொறுப்பு மிக்க 03 சேவைத் தொகுதிகளில் 09 பதிவுகளுக்கான வெற்றிடங்கள் நிலவின.‘.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக 13 நிறைவேற்றுதர ஆயுர்வேத வைத்தியர்கள் சமயாசமய அடிப்படையிலும் 10 ஊழியர்கள் இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலைப் பதவிகளுக்கும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(உ) 2013 சனவரி 01 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணிப் பட்டியலில் மருந்தக உதவியாளர் பதவி நீக்கப்பட்டிருந்தபோதும், 08 ஊழியர்கள் அப்பதவியில் பணியாற்றியவாறிருந்தனர்.

(ஊ) கராஜ் மேற்பார்வையாளர் மற்றும் வருவாய்ப் பொறுப்பாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் உள்ளடங்காதபோதும், அப்பதவிகளில் 02 ஊழியர்கள் பணியாற்றியிருந்தனர்.

(எ) லுனாவ அபிவிருத்திச் செயலகத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 12 ஆகும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிரந்தர ஊழியர்கள் எவரும் பணியிலமர்த்தப்பட்டிருக்கவில்லை.

**3.10 சொத்து முகாமைத்துவம்**

**பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) சொத்துப் பதிவேட்டில் உள்ளடங்கிய ரூபா 36,382,958 கிரயமுடைய 17 வாகனங்களும் இயந்திர சாதனங்களும் 01 முதல் 07 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஆ) புதிய மின்பிறப்பாக்கியைக் கொள்வனவு செய்வதற்காகச் செயற்படும் நிலையில் உள்ள மின் பிறப்பாக்கி 2010 யூலை 28 முதல் பயன்படுத்தப்படாதபோதும், அது சபை வளாகத்தில் பயன்படுத்தப்படாதிருந்தது.

(இ) சபைக்குரிய 6 உத்தியோகபூர்வ மனைகள் பயன்படுத்தப்படாது மூடப்பட்டிருந்தன.

(ஈ) 2010 டிசெம்பர் தொடக்கம் வழங்கல் எதுவுன்றி லுனாவ செயற்த்திட்டத்திலிருந்து பெறப்பட்ட வாகனத் துணைப் பாகங்கள் 26 வகையான 154 கூறுகளைக் கொண்டவனவாகும். ஏனைய 305 வகையான கூறுகள் 1,277 ஆகும். இவை பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் இருந்தன.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) மீளாய்வாண்டின்போது வருவாய் மற்றும் செலவின விடயங்களுக்கிடையே நிதியேற்பாட்டை மாற்றஞ்செய்து மற்றும் மேலதிக மதிப்பீட்டைப் பெற்றதன் பின்னரும் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய் 79 சதவீத அதிகரிப்பிலிருந்து 96.6 சதவீதக் குறைவுக்குள்ளாகியிருந்தது. பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினம் 2.22 சதவீதம் முதல் 69.61 சதவீதம் வரை அதிகரிப்புள்ளாகியதும் அவதானிக்கப்பட்டது. இதன் மூலம் பாதீடானது ஆக்கப்பூர்வமான முகாமைத்துவக் கட்டுபாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை எனத் தெரிய வந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது பாதீடு செய்யப்பட்ட மூலதன வருவாயில் 79.13 சதவீதத்தையும் பாதீடு செய்யப்பட்ட மீண்டு வரும் வருவாயில் 7.32 சதவீதத்தையும் சபை சம்பாதிக்கத் தவறியிருந்தது. பாதீடு செய்யப்பட்ட மூலதனச் செலவினத்தில் 69.1 சதவீதமும் பாதீடு செய்யப்பட்ட மீண்டும் வரும் செலவினத்தில் 9.6 சதவீதமும் ஆண்டின்போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின்போது ரூபா 742,000 வருவாயை எதிர்பார்த்த 16 வருவாய் விடயங்களின் மூலம் வருவாய் எதுவும் ஈட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன், ரூபா 7,361,000 பெறுமதியான மீண்டுவரும் செலவின விடயங்கள் 123 மற்றும் ரூபா 88,630,000 பெறுமதியான மூலதனச் செலவின விடயங்கள் 26 என்பவற்றில் மீளாய்வாண்டின்போது செலவு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின்போது 50 சதவீதத்திற்கு அதிகமான வருவாய் இலக்கை அடைய முடியாதிருந்த 13 வருவாய் விடயங்களது எதிர்பார்த்த வருவாய் ரூபா 31,642,000 ஆகியபோதும், உள்ளவாறான வருவாய் ரூபா 6,137,138 ஆகவிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) நிலையான சொத்துக் கட்டுபாடு
(உ) ஒப்பந்த நிர்வாகம்